பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
05 11 2024 **TUESDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- அமைதியையும், அகிம்சையையும் முன்நிறுத்தும் பௌத்த கொள்கைகள் இன்றைய உலகிற்கு மிகவும் அவசியம் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்
- இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான இருதரப்பு உறவு சீரான வளர்ச்சியை கண்டு வருவதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- இந்திய கடல்சார் துறையில் 100 பில்லியன் டாலர் அளவிற்கு வெளிநாட்டு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.
- துப்புரவுப் பணியில் ரோபோக்களை ஈடுபடுத்துவதற்கு ஐஐடி-யுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு தெரிவித்துள்ளார்.
- சீனாவில் நடைபெற்ற உலக Soft Tennis சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Tanushree Pandey வெள்ளிப்பதக்கம் வென்றார்

>>>><<<<

அமைதியையும், அகிம்சையையும் முன்நிறுத்தும் பௌத்த கொள்கைகள் இன்றைய உலகிற்கு மிகவும் அவசியம் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று முதலாவது ஆசிய பௌத்த உச்சி மாநாட்டை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்தியா, ஒவ்வொரு காலகட்டத்திலும் கவுதம புத்தரின் சீரிய போதனைளால் ஆசிர்வதிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

போதி மரத்தின் கீழ் சித்தார்த்த கவுதம் ஞானம் பெற்ற சம்பவம், வரலாற்றில் ஈடுஇணையற்றது என்றும் மக்களை வழிநடத்திய ஞானிகளில் புத்தருக்கு தனிஇடம் உண்டு என்றும் அவர் குறிப்பிட்டார்.

போர், வன்முறை, வறுமை முதலிய பிரச்சினைகள் பெருகிவரும் தற்போதைய காலகட்டத்தில், ஆசிய கண்டத்திற்கும், உலகத்திற்கும் உண்மையான அமைதியை அளிக்கவல்ல அகிம்சை கொள்கையை பௌத்தம் வலியுறுத்துகிறது என்றும் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்தார்.

சர்வதேச பௌத்த கூட்டமைப்புடன் மத்திய கலாச்சார அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள இந்த உச்சிமாநாடு, இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

>>>><<<<

இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான இருதரப்பு உறவு சீரான வளர்ச்சியை கண்டு வருவதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் கேன்பராவில் நடைபெற்ற இந்திய – ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர்கள் நிலையிலான பேச்சுவார்த்தையில், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. Penny Wong–குடன் அவர் பங்கேற்றார்.

இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும், இந்திய – பசிபிக், மேற்காசியா, யுக்ரைன் தொடர்பான சர்வதேச பிரச்சினைகள் குறித்தும் அதில் விவாதிக்கப்பட்டதாக அவர் தனது சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பு, வர்த்தக விரிவாக்கம், கல்வி மேம்பாடு உள்ளிட்டவற்றில் இந்தியா – ஆஸ்திரேலியா இடையிலான ஒத்துழைப்பு பிரதிபலிக்கப்பட்டு வருவதாக டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

இந்திய கடல்சார் துறையில் 100 பில்லியன் டாலர் அளவிற்கு வெளிநாட்டு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற கடல்சார் மாநாட்டில் பேசிய அவர், அடுத்த 25 ஆண்டுகளுக்குள் இந்திய கடல்சார் துறையின் வளர்ச்சியை பன்மடங்கு அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தொன்றுதொட்ட காலம் முதல் தமிழகத்தில் கடல்சார் வணிகம் அண்டை நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டதாகவும், உலகின் பல பகுதிகளுக்கு இந்தியாவிலிருந்து பொருட்கள் வணிகம் செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதனை மீண்டும் உலகிற்கு முன்நிறுத்தவே மத்திய அரசு கடல்சார் வணிக திட்டங்களுக்கு புதிய உத்வேகம் அளித்ததாக அவர் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.20 மாநாட்டின் போது, இந்தியா மத்திய கிழக்கு, ஐரோப்பா இடையேயான கடல்வழி வணிகப் பாதையை விரைவுபடுத்துவதற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டதாக அவர் கூறினார்.

இதனால், சர்வதேச அளவில் வர்த்தக செலவுகள் குறையும் என்றும், நியாயமான விலையில் வர்த்தகம் மேற்கொள்ளப்படுவதுடன், கூடுதல் வேலைவாய்ப்பு உருவாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சாகர்மாலா திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டு, வளர்ச்சி உருவாகும் என்றும், கடல்சார் கட்டமைப்பு உத்வேகம் பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வணிகம் மட்டுமல்லாது, கப்பல் கட்டுமானத் தொழிலும் முன்னேற்றம் பெறும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கார்பன் வாயுக்களை குறைத்து, மாசு இல்லாத துறைமுகங்களை அமைக்கவும், ஹைட்ரஜன் உற்பத்தி மையமாக இந்தியாவை உருவாக்கவும் அரசு திட்டமிட்டு, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் திரு. சர்பானந்த சோனாவால் கூறினார்.

>>>><<<<

புனே திரைப்படக் கல்லூரி மாணவர் சிதானந்த நாயக் இயக்கிய Sunflowers were the first once to know என்ற குறும்படம் ஆஸ்கார் விருதுக்கான குறும்பட பிரிவு போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

இந்த குறும்படம் இந்திய நாட்டுப்புற கதைகளை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது.

Cannes திரைப்பட விழாவில் La Cinef தேர்வில் இந்த குறும்படம் முதல் பரிசை வென்றது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<

கோவையில் துப்புரவுப் பணியில் ரோபோக்களை ஈடுபடுத்துவதற்கு சென்னை ஐஐடி-யுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களை சந்தத்துப் பேசிய அவர், அப்பகுதியில் நடைபெற்று வரும் மாநில அரசின் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

மேலும், SUEZ - 24 மணிநேர குடிநீர் திட்டப் பணிகள் அடுத்த ஆண்டுக்குள் 80 சதவீதம் நிறைவடையும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(சவுண்ட் பைட் - கே.என். நேரு 40 செகண்ட்ஸ்)

>>>><<<<

கோவை மாவட்டம், சூலூர் அருகே ராணுவ தளவாட உற்பத்தி தொழில்பூங்கா அமையவுள்ள இடத்தில் தமிழக தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோவையை பொறுத்தவரை இந்த தொழில் பூங்கா மிகப் பெரிய வளர்ச்சியை உருவாக்கும் என்று தெரிவித்தார்.

இந்த தொழில் பூங்காவிற்கான நீர்ஆதாரம், திருப்பூர் மாவட்டத்திலிருந்து பெறப்படவுள்ளது என்றும், தொழிற்கூடங்களிலிருந்து சிறிதளவு தண்ணீர் கூட வெளியேறாத வகையில் மறுசுழற்சி செய்து பயன்படுத்தப்படும் என்றும் திரு. டி.ஆர்.பி. ராஜா கூறினார்.

>>>><<<<

சிக்கிம் மாநிலம், Gangtok-ல் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், இன்று முதல் சில கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, ஒற்றைப்படை எண் கொண்ட வாகனங்கள், ஒற்றைப்படை தேதிகளிலும், இரட்டைப்படை எண் கொண்ட வாகனங்கள், இரட்டைப்படை தேதிகளிலும் அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், ஆம்புலன்ஸ் சேவை, காவல்துறை, தீயணைப்புத்துறை மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு இதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

சூரியனை வழிபடும் விதமாக கொண்டாடப்படும் சத் பூஜை இன்று தொடங்குகிறது.

நான்கு நாட்கள் நடைபெற்றும் இந்த பூஜையானது வரும் 8ஆம் தேதியன்று நிறைவடைகிறது.

முதல் நாளான இன்று மக்கள் நீர்நிலைகளில் நீராடி, சூரியனை வழிபாடு செய்தனர்.

இந்த கொண்டாட்டத்தை ஒட்டி, நேபாளத்தின் காத்மாண்டு பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள ஆறுகள் மற்றும் குளங்கள் சுத்தம் செய்யப்பட்டு, அலங்கரிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

தில்லியிலிருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு செல்லும் வகையில், 22 பண்டிகை கால சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

சத் பூஜையை முன்னிட்டு கடந்த 2ஆம் தேதி முதல் வரும் 8ஆம் தேதிவரை 145 சிறப்பு ரயில்களை இயக்க முடிவு செய்யப்பட்டதாகவும் அது கூறியுள்ளது.

>>>><<<<

Maldova நாட்டின் அதிபராக Maia Sandu இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அதிபர் தேர்தலில் எதிர்த்து போட்டியிட்ட Alexandr Stoianoglo-வை விட 10 சதவீத வாக்குகள் அதிகம் பெற்று, அவர் வெற்றிபெற்றார்.

Maia Sandu –வுக்கு அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

>>>><<<<

சீனாவில் நடைபெற்ற உலக Soft Tennis சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Tanushree Pandey வெள்ளிப்பதக்கம் வென்றார்.

Jingshan நகரில் நடைபெற்ற 21 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில், தைபே-யின் Chiang Min Yu அவரை 4-3 என்ற செட்கணக்கில் தோற்கடித்தார்.

>>>><<<<

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Rithvik Choudary Bollipalli - போர்ச்சுக்கலின் Francisco Cabral இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் எதிர்த்து ஆடிய ஃபிரான்ஸின் Arthur - Harold இணை காயம் காரணமாக விலகியதை அடுத்து, இந்த இணை வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

>>>><<<<

சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி இன்று தொடங்குகிறது.

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் வரும் 11-ஆம் தேதிவரை இப்போட்டி நடைபெறுகிறது.

மாஸ்டர்ஸ் பிரிவில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி, விடித் குஜராத்தி, அமெரிக்காவின் லேவோன் ஆரோனின் உள்ளிட்ட எட்டு வீரர்களும், சேலஞ்சர்ஸ் பிரிவில் இந்தியாவின் கார்த்திகேயன் முரளி, ஹரிக்கா துரோணவள்ளி, வைஷாலி உள்ளிட்ட எட்டு பேரும் பங்கேற்கின்றனர்.

>>>>END<<<<